Regd. No. M. 4900. 8-பக்கங்கள் தனிப்பிரதி விலை 0-1-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 ஈரோடு 1-11-1947 சனிக்கிழமை மலர் 8.

# பெரியக்கிராரத்தில் பெரியார்

★

ஈரோடு பெரியக்கிராரத்தில் 14-10-47 அன்று திராவிடக் கழகத்தின் சார்பாக நடந்த நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்கள் பேசியதாவது:—

அன்புமிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! மதிப்புக்குரிய ஹாஜியார் அவர்களே! பொது மக்களே!

இந்த நிதியளிப்பின் காரணமாக இவ்வூருக்கு வரநேர்ந்ததற்காகவும், தாங்களெல்லாம் இத்தகைய அமோகமான வரவேற்பளித்ததற்காகவும், நான் மகிழ்ச்சியடைவதோடு, கொஞ்சம் பெருமையும் கொள்கிறேன். இது உண்மையாகவே, என்னை நானே பாராட்டிக் கொள்ளக்கூடிய பெரும் பேறு ஆகும். இவ்வூர், என் சொந்த ஊர் போன்றது. இவ்வூர்ப் பெருமக்களும் பெரியோர்களும் என்னை நன்கறிந்தவர்கள், என்னோடு ரொம்பவும் பழக்க முள்ளவர்கள். ஒருவர் தம் சொந்த ஊரிலேயே பெருமைப்படுத்தப்படுவதென்பது, உண்மையிலேயே பாராட்டுதற்குரிய காரியமேயாகும். அத்தாற்போல் இந்த ஊர் முஸ்லிம் லீக் சார்பாக, ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ள அவ்வளவு பெருமைக்கும் நான் உரியவனே யாயினும் அதை அவர்களுடைய அன்பிற்கும் நம்பிக்கைக்கும் ஓர் அறிகுறியாகக்கொண்டு, நன்றி செலுத்துகிறேன். மேலும் பொதுமக்கள் சார்பாகப் பல மலர்மாலைகள் சூட்டப்பட்டன. அதற்காகவும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கணிசமாகக் கழக நிதிக்காகப் பொருளுதவி செய்த தோழர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். சமீபத்தில்தான் இந்த நிதி வசூல் மும்முரமாக துவக்கப்பட்டதென்றாலும் இதே போல் பல இடங்களிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக நாம் கோரிய தொகை ரூ. 50 ஆயிரமும் ஏறக்குறைய கிடைத்து மாதம் ரூ. 200, 300 செலவில், பிரச்சாரமும் தற்போது நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அரசியல் ஒரு பித்தலாட்டம்.

நான் தற்கால அரசியல் நிலை பற்றிப் பேசுவேன் என்று தலைவர் தெரிவித்தார். அரசியலே ஒரு பெரிய பித்தலாட்டம் என்பதும், அது பல கசமாலங்களும் ஆபாசங்களும் நிறைந்ததென்பதும், அதில் மருந்துக்குக்கூட நாணயமென்பது கிடைப்பது அரிது என்பதும் தான், அரசியல் அறிஞர்களின் கருத்தாகும். என்னுடைய கருத்தும் அப்படித்தான். அறிவாளிகளாலேயே அரசியலிலுள்ள பித்தலாட்டங்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமென்றால், பெரும்பாலும் படிப்பு வாசனையற்ற நம் நாட்டு மக்களால், எப்படி அரசியலைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியும்? ஆதலால், நீங்கள் நான் கூறுவனவற்றை, சர்வ ஜாக்கிரதையாகக்கேட்டு, உங்கள் பகுத்தறிவு கொண்டே எந்த முடிவையும் செய்ய வேண்டுகிறேன்.

### கொள்ளைக்கூட்டத்தில் இல்லாத கட்டுப்பாடா?

### கட்டுப்பாடு வேறு நியாயம் வேறு.

இன்று நம் நாட்டு அரசியலில், பற்பல கட்சிகள் இருக்கின்றன. அவற்றின் போரால் மக்களிடையே பரப்பப்பட்டு வரும் பித்தலாட்டங்களும் பற்பலவாகும்: எந்த ஒரு கட்சியும் தன்னிடத்துக் கொண்டுள்ள கட்டுப்பாட்டால் மட்டும் நியாயமான கட்சியாகிவிடாது. ஒரு சில தனிப்பட்ட நபர்கள் கூடக் கட்டுப்பாடாக நடந்து கொண்டு, செல்வாக்கினாலும், பலம் பொருந்திய பிரச்சாரத்தினாலும் ஒரு கட்சியை ஸ்தாபித்துவிட முடியும். அதை ஒரு கட்டுப்பாடான ஸ்தாபனம் என்று கூறலாமே தவிர, நியாயமான ஸ்தாபனம் என்று கூறிவிட முடியாது. ஒரு கொள்ளைக்கூட்டத்தை எடுத்துக்கொள்வோம். கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த அத்தனை திருடர்களும், தாங்கள் கொள்ளையடிக்கும் பொருளில் கிடைக்கும் லாபத்தின் பங்கு விகிதத்திற்காக, அந்த லாபத்திலுள்ள ஆசையின் காரணமாக, சிற்சில மன வேறுபாடுகள் இருந்தும்கூட ஒன்றுபட்டிருக்கிறார்கள். அதன் மூலம் பலமும் பெற்று விளங்குகிறார்கள். கட்டுப்பாடான கூட்டம் என்பதற்காகவோ அதில் நியாயமான பங்கு பிரிவினை உண்டு என்பதற்காகவோ, அல்லது அது பலம் பொருந்திய கூட்டம் என்பதற்காகவோ அதை நியாயமான ஸ்தாபனம் என்று கூறிவிட முடியுமா? இன்றைய காங்கிரசை எடுத்துக்கொள்ளுவோம். அதிலுள்ள அங்கத்தினர்களிடையேயும், தலைவர்களிடையேயும், எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருந்துவந்த போதிலும் அவர்கள் அந்த ஸ்தாபனத்தின் மூலம் தமக்குக் கிடைத்துவரும் செல்வாக்கு, லாபம், பெருமை இவற்றிற்காக, இவற்றின் மீதுள்ள ஆசையின் காரணமாக, சுருக்கச் சொல்லின், தங்கள் சுயால விருத்திக்கு இடம் இருந்து வருவதின் காரணமாக, அந்த ஸ்தாபனத்தின் கட்டுப்பாட்டைக் குலைக்க விருப்பமில்லாமல் இருந்து வருகிறார்களே ஒழிய, அதை விட்டு நீங்கினால் இன்னும் கொஞ்சம் லாபம் கிடைக்குமானால், அதைவிட்டு வெளியேறச் சிறிதும் தயங்கமாட்டார்கள் இவ்விதமே நடந்து வருவதையும்,

**ஆரியர், திராவிடரை அசுரர் என்றனர்.**

அன்றாடம் கண்டும் வருகிறோம். அரசாங்கமும், பிரச்சார யந்திரமும், அவர்கள் கையில் சிக்கிக்கொண்டதால், என்னதான் குறைபாடு இருந்தாலும், கட்டுப்பாடுள்ள ஸ்தாபனமாகவே விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. அறியாத நம் அப்பாவி மக்களும், இந்த போலி விளம்பரத்தையே உண்மையானதென்று நம்பிவிடுகிறார்கள். இத்தகைய போலி விளம்பரத்தால்தான் நாட்டில் காங்கிரசுக்கு மாறுபட்ட முஸ்லிம் லீக், ஹிந்து மகாசபை, பொதுவுடைமைக் கட்சி, சமதர்மக் கட்சி, பிராமண மகாசபை, திராவிடக் கழகம் ஆகிய மற்றும் பல அரசியல், பொருளாதார, சமூக ஸ்தாபனங்களும் கட்சிகளும் இருந்தும் தாமே இந்நாட்டின் 30 கோடி மக்களின் ஏகப்பிரதிநிதி என்று காங்கிரஸ் கூறிக்கொள்ளுகிறது. நாட்டின் எங்கேயோ ஒரு மூலையில், ஒரு மூணேமுக்கால் பேருக்குக் குருவாக இருந்துவரும் சங்கராச்சாரியார், கட்டுப்பாடான ஒரு கூட்டத்தின் பிரச்சாரத்தால், "லோககுரு' என்று வழங்கப்பட்டுவரும்போது, நாட்டில் தம் கட்சியைச்சேர்ந்த ஒரு சில மக்களுக்கு மட்டுமே பிரதிநிதித்வம் பெற்ற காங்கிரஸ் தம்மை ஏகப்பிரதிநிதி என்று கூறிக்கொள்வதும், அதைப் பாமர மக்கள் நம்புவதும் ஒன்றும் ஆச்சர்யப்படுவதற்கான விஷயமல்ல. இது போலவேதான், வெறும் அதிகாரமாற்ற இராஜ்ஜியம், சுயராஜ்யம் என்று விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. பாட்டாளிமக்களைப் பொருத்தவரை, இது ஒரு பித்தலாட்ட சுயராஜ்யம்தான். சோற்றுப்பஞ்சம்; துணிப்பஞ்சம், ஆங்காங்கு அடிதடி கலகங்கள், வகுப்புக் கலவரங்கள், போதாக்குறைக்கு அகதிகள் தொல்லை ஒருபுறம்.

## ஒண்ட வந்த பிடாரிகளின் திருவிளையாடல்கள்

ஒருசில நாட்களுக்கு முன், திருவொற்றியூரில், முகமூடி அணிந்துகொண்டு, ஒரு வீட்டில் புகுந்து ரிவால்வர்களைக் காட்டி மிரட்டி, நகைகளைப் பிடுங்க, எத்தனித்தார்களாம் சில அகதிகள். பெண்கள் கூப்பாடுபோடவும், மேலிருந்து சிலர் கீழிறங்கி வரவும்; அவர்கள் ஓடி மறைந்தார்களாம். போலீஸ் அவர்களைப் பிடிக்க முயன்று வருகிறார்கள். இப்படிப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

சென்னையில் ஒரு ஹோட்டலில் நுழைந்து, ஒரு அகதி கண்டபடிச் சாப்பிட்டாராம். சாப்பிட்டுவிட்டு பில் கொடுக்கக் கல்லாவிடம் வந்தாராம். சற்று மேல்நோக்கிப் பார்த்தாராம். காந்தியார் படம், நேருபடம் அவர்களுடன் தோழர் ஜின்னா அவர்களின் படமும் மாட்டப்பட்டிருந்ததாம். அவர் அதைப் பொறுக்கமாட்டாமல், இதென்ன அக்கிரமம்! காந்தியார் படத்துடன் ஜின்னா படமும் மாட்டப்படுவதா? என்று அருகிலிருந்த டம்ளரை எடுத்து ஓங்கி அறைந்தாராம் ஜின்னா படத்தின்மீது. ஹோட்டல்காரர் நமக்கேன் இந்தப் படத் தொல்லை என்று எல்லாப் படங்களையும் கழற்றி வைத்துவிட்டாராம். நம்மவர்கள் எவ்வித வித்யாசமுமில்லாமல், தலைவர்களின் படத்தை வீட்டில் மாட்டிவைப்பது வழக்கம். மேலும் நம்மவர்கள் எந்தக் கட்சியாராயிருந்தாலும் தனிப்பட்ட முறையில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும் பழக்கமும் நம்மிடம் கிடையாது. இப்படிப்பட்ட அமைதியான நிலைமையைக் கெடுக்க, இந்த அகதிப்பட்டாளம் நம் நாட்டிற்கு வந்திருக்கிறது. வேண்டுமளவும் பணம் கொடுத்து, அவர்களை வேறோர் மாகாணத்தில் வைத்துப் போஷித்து, வரவேணடும் என்று நாம் கடலூர் மாநாட்டில் செய்த தீர்மானத்தை, நமது மந்திரிகள் கவனித்ததாகவே தெரியவில்லை. தற்போது 100 அகதிகள்தான் வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கணக்குப்படி 100 கணக்கின்றி இறக்குமதியானது எத்தனைபேரோ? இன்னும் இந்தக் கூட்டம் அதிகமாகிக்கொண்டே போகுமானால், அக்கிரமங்கள் கணக்கின்றி ஆகிவிடுமே.

## அகதிப்பெருக்கம் அவதிக்கறிகுறி

இந்த அகதிப்பட்டாளம் போலீஸ் பட்டாளத்தைக்கூட எதிர்க்க ஆரம்பித்துவிடுமே. சனம் மந்திரிமார்கள் இதை விளையாட்டு என்று கருதி சிந்திக்க மறுப்பார்களானால் நாடெங்கும் இந்த அகதிகள் தொல்லை சகிக்க முடியாததாகிவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இது முடிவில் ஹிந்து முஸ்லிம் கலவரமாகி, மக்கள் பெருந் துன்பத்துக்காளாக வேண்டியிருக்கும். பாதுகாப்புச் சட்டப்படி, விருந்துக்குக் கூட்டிவந்த இவர்களையே, அரசாங்கம் கைதியாக்கவேண்டிய நிலைமை ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் வருமானால், ஒரு பெரிய மானக்கேடாக முடியும் என்று எச்சரிக்கை செய்கிறேன். வந்துள்ளவர்களை தனியிடத்தில் வைத்து, பாதுகாப்போடு காரணமின்றி நமது நாட்டில் வந்து குவியும் வடநாட்டுக் கூட்டத்தையும் கண்காணித்துவர, அரசாங்கம் ஏற்பாடு செய்தல் அவசியம். இனி வர இருக்கும் அகதிகளை, சால்யாக உடனே ஏதாவதொரு மிலிட்டரி கேம்ப்களிலாவது வைத்து, மதராஸ் பட்டாளத்தைக்கொண்டு பாதுகாவல் செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

## சுயராஜ்ஜியம் தந்த சுகம்?

ஆதலால் தோழர்களே! இன்றைய சுயராஜ்யத்தால், நமது பட்டினி நீங்கவில்லை! துணிப்பஞ்சம் நீங்கவில்லை! படிப்பில்லாதவர்கள் படிக்க வசதியில்லை! உயர்வு தாழ்வு நீங்கவில்லை! வர்ணாச்சிரமம் ஒழியவில்லை! வரிப்பளுவு ஏறி வருகிறதே தவிர, குறையக்காணோம். நமக்குள் ஒற்றுமை கெட்டுவருகிறது! நம்நாட்டு நிலைமையைச் சமாளிப்பதற்கான அதிகாரம் நம்மவரிடத்துமில்லை! டெல்லிக்குத்தான் சகல அதிகாரமும். இப்படியான குறைகளை எடுத்துக் கூறினால், நாங்கள் வெள்ளையன் கூலிகளென்றும், வெள்ளையன் இருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் என்றும் எதிரிகள் கூறி வருகிறார்கள். இன்றையக் காங்கிரஸ் தோழர்களில் சிலர், காங்கிரஸ் என்பது என்னவென்று புரிந்துகொள்வதற்கு முன்னாடியே, நான் காங்கிரஸ் தலைவனாகப்பட்டிருந்தவன். நான் அறிந்ததைச் சொல்கிறேன். வெள்ளையனைக் கூட்டிவரப் பார்ப்பனர்தான் காரணம். அவர்களை நாட்டில் நிலைத்திருக்கச் செய்ததும் பார்ப்பனரின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் ஸ்தாபனமேயாகும். காங்கிரஸ் சரித்திரத்தைப் புரட்டிப்பாருங்கள். அதன் முதல் தீர்மானம் "பிரிட்டிஷ் மன்னர் கடவுளால் அனுப்பப்பட்டவர்; இவர் கடவுள் அம்சம்; இந்நாட்டு இந்து மதச் சம்பிரதாயப்படி இவர் விஷ்ணு அம்சம். இவர் கல்லுள்ள அளவும், நீருள்ள அளவும் இந்நாட்டை ஆட்சி புரிந்து வரவேண்டும்" என்று இருக்கிறதே? அரசாங்கத்தை ஆதரித்து தம்மவரே உத்தியோகம் பெறுவதற்கான வசதிகள் செய்துகொண்ட, பார்ப்பனர் நம்மை தேசத்துரோகிகள் என்று கூறுவது ஆச்சரியமாகவே இருக்கிறது. வெள்ளையன் வரும்போது இந்நாட்டை ஆண்டவர்கள் நாமல்லவோ! அன்று நம்மை வெள்ளையனுக்குக்காட்டிக் கொடுத்துச் சதி செய்தவர்கள்தானே இந்தப் பார்ப்பனர். அப்படியிருக்க வெள்ளையன் போகவேண்டுமென்று நினைக்கக்கூடியவர்கள், இந்நாட்டை ஆண்டவர்களாகிய நாமா? அல்லது இந்தச் சதிகாரப் பார்ப்பனக்கூட்டமா? பின்பும் இவர்கள் தானே, உத்தியோகம் பெற படிப்புவேண்டுமென்று சொல்லி, படிப்பின் அளவை ஏற்றிக்கொண்டே போய், நம்மவர் உயர்ந்த உத்தியோகங்கள் பெற முடியாமற்படி செய்து, வெள்ளையன் ஆட்சியை நிலைநிறுத்தியவர்கள். நம்மவர்கள் உயர்ந்த உத்தியோகங்கள் பெற்றிருந்திருக்கும் பட்சத்தில், என்றோ நம் நாடு சுதந்திரம் அடைந்திருக்குமே!

[ தொடர்ச்சி 6ம் பக்கம் ]

# மானத்தை அடகுவைக்கும் மாகாண சர்க்கார்.

(ஈட்டி எழுதுவது)

★

## 1. உணவில்.........

8 அவுன்ஸ் அரிசி ரேஷன் எப்பொழுது தொலையும்? இது இந்நாளில் எங்கும் கேட்கப்படும் கேள்வி.

நாள் முழுவதும் பாடுபடும் பாட்டாளி, வயிறாறுக்கும் போதாமல் நாள் தோறும் வெவ்வேறு வகையான சோற்றை—சோறு என்று பெயர்படைத்ததை யுண்டு, வேதனைப்படுவது நாம் நாட்டிலே பார்த்து வரும் காட்சி.

அரசாங்க நிர்வாகத்தை அறை கூவுவது போல, சிலர் ரேஷன் என்பதைக் கேள்விப்படாதவர்களாய் உண்டுவாழும் உல்லாசக் காட்சி மற்றொருபுறம்.

இந்திய யூனியனிலுள்ள மற்ற மாகாணங்கள், தத்தம் மாகாண மக்களுக்கு 12 அவுன்ஸ் கொடுத்து வருகின்றன என்பது பத்திரிகைச் செய்தி.

வயிறார உணவும், வாய்க்குச் சோறாகவுமிருக்க, நம் மந்திரிகள் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

மக்கள் கேட்கும் கேள்விக்கு சட்டசபையில், மந்திரி ராஜன் விடை கூறுகிறார்.

கேள்வி: அக்டோபர் 30ம் தேதிக்குள் சுமார் 1 லட்சம் டன்னுக்கு மேலிருக்கும் தானியக் குறைபாட்டை ஈடு செய்யச் சர்க்கார் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது?

விடை: மத்திய சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருப்பதுமட்டுமின்றி, மாகாணத்தில் கொள்முதல் வேலையும் கையாளப்பட்டு வருகிறது.

கே: எல்லா மாகாணங்களிலும் தானியப் பங்கீட்டின் அளவை ஒரே மாதிரியாக, நிர்ணயிக்கும்படி இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவில்லையா?

விடை: இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடம் பல தடவை வற்புறுத்தியாகி விட்டது.

## 2. உடையில்.........

உணவுக்கு அடுத்த நிலையிலுள்ளது உடை. இவ்வுடைகளைத் தயாரிப்பது மில்கள்; அடுத்தபடியாக, கைத்தறி நெசவுகள்.

பெருவாரியான ஏழை மக்கள் உடுத்தி வருகின்ற, ஆடைக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்து வருவதில், பெருத்த நஷ்டமுண்டாகி வருகிறதாம். நிலைமையைத் தவிர்க்காவிட்டால் மில்களை மூடவேண்டியதுதானாம். நூல் விலையையுயர்த்துவதற்கு, இது ஆலையரசர்கள் காட்டும் பூச்சாண்டி. சில மில்களையும் மூடுவிழாச் செய்து காட்டுகிறார்கள்.

5 கஜம் போதாமையால், கைத்தறித் துணியை வாங்கலாமென்றாலோ, அது பாட்டாளி மக்களைத் 'திரும்பியும் பார்க்காதே'' என்று கூறுமளவுக்கு, விலை யர்ந்திருக்கிறது. கைத்தறித் துணியின் விலை குறையவேண்டுமானால், நெசவுத்தொழிலாளிக்கு, மாதம் முழுவதற்கும் சரியான வேலை கொடுக்கவேண்டும், வேலையென்றால் தேவையான அளவுக்கு நூல் கொடுத்துவர வேண்டும். மில்கள் தயார் செய்து கொடுக்கிற நூல்கள் மாதத்திற்கு 10, 12 நாளுக்கே வருகின்றன. இந்த நிலையில் நெசவுத்தொழிலையே நம்பியிருக்கின்ற எங்கள் வயிற்றில் அடிக்கிறது போலே, எங்கள் கூலியிலே கைவைக்கலாமா? என்று கேட்கின்றனர் நெசவுத்தொழிலாளிகள்.

மக்கள் சர்க்கார் இந்நிலையில் என்ன செய்யவேண்டும்? ஆலை மன்னர்கள் கூறுவது உண்மைதான்; அவசியம் விலையுயர்த்த வேண்டியதுதான்; என்று கண்டால் விலையை யுயர்த்த அனுமதி கொடுக்க வேண்டும். இல்லாத போனால் தாமே ஆலைகளை ஏற்று நடத்த முன்வரவேண்டும். இவ்விரண்டில் ஒன்றைத்தானே செய்ய வேண்டும். கேளுங்கள் தொழில் மந்திரியார் சீதாராம ரெட்டியார் செப்புகிறார்,

"30ம் நம்பர் நூலுக்குக் கீழ்ப்பட்ட நூலுக்கு விலையையுயர்த்தவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியும். இதனால் மில்கள் நஷ்டத்தில் நடந்து வருவதாகவும், இப்படியே விட்டால் மில்களை மூடவேண்டியதாய் வருமென்றும் பல மில்களிலிருந்து, சர்க்காருக்கு அறிவிப்பும் கோரிக்கைகளும் வந்தன. இப்படி வந்தவைகளை மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது. ஏனெனில் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய சர்க்கார வசமே இருக்கிறது.

கே: மில்கள் நஷ்டத்தில் நடக்கிறதென்று நிர்வாகிகள் அறிவிப்பதால் மில்களைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள ஏன் யோசிக்கக் கூடாது?

விடை: இந்த விஷயம் இப்போழுது சர்க்காரின் பரிசீலனையில் இல்லை.

கே: உயர்ந்த ரக நூலை உற்பத்தி செய்வதைச் சிறிது காலத்திற்கு ஏன் தடை செய்யக் கூடாது?

விடை: ஒரு குறிப்பிட்ட நூலை உற்பத்தி செய்யத் தடை செய்யும் அதிகாரம் இந்திய சர்க்காருக்குண்டே தவிர, மாகாண சர்க்காருக்குக் கிடையாது.

## 3. போக்குவரத்தில்.........

நம் மக்களுக்குப் போதுமான—தேவையான உணவுப் பொருளை நம் மந்திரி சபையார் கொடுக்க முடியவில்லை என்பதுமட்டுமல்ல; கொடுப்பது என்று திட்டமிட்ட 8 அவுன்சைக்கூடப் பல இடங்களில் சரிவரப் பங்கீடு செய்ய முடியவில்லை. இதைப்பற்றிப் புகார்கள் வேறே சர்க்காருக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால் போக்குவரத்தின்மீது பழியைப் போடுகின்றார்கள். கார்களுக்குப் போதுமான அளவு பெட்ரோல் இல்லை என்பது, போக்குவரத்தைப் பாதிப்பதற்குக் கூறும் காரணம். இந்த வேளையில் மத்திய சர்க்கார், மானங்கெட்ட சென்னை சர்க்காருக்கு ஒரு அறிவிப்புச் செய்கிறது. குளிரது

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

குடி அரசு

1-11-47 சனிக்கிழமை

# ஜமீன், இனாம், மடம், ஒழிப்பு

## I

சென்னை அரசாங்கம் ஜமீன் ஒழிப்பு வேலை என்று துவக்கி, இனாம் ஒழிப்புக்குச் சென்று, மட ஒழிப்புக்குக் கவனத்தைத் திருப்பி, டில்லி புண்ணிய ஸ்தலத்திற்குக் காவடி எடுத்து, யாத்திரை செய்து விட்டு இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கின்றது.

இந்த முயற்சியின் முடிவு என்பதாக, ஏதாவது இருக்குமானால், அது, திராவிடர்களைப் பழிவாங்கி, ஆரியர்களுக்குக் கேள்வி கேட்பாடற்ற ஏகபோக உரிமையைக் கொடுத்து, "மநு" தர்ம ஆட்சி நிலைக்கு நம் மக்களைக்கொண்டு போய் வைப்பதாகவே இருக்குமே அல்லாமல், மற்று எதுவாகவும் இருக்காது என்கின்ற விஷயத்தில் எந்தத் திராவிடருக்கும், சந்தேகம் வேண்டியதில்லை என்று கூறலாம்.

இனி ஜமீன் ஒழிப்புப் பித்தலாட்டத்தைப்பற்றியே சிறிது கவனிப்போம்.

"ஜமீன் ஒழிப்பு" எப்பொழுது, எங்கிருந்து, யாரால், எதற்கு, ஆகத் துவக்கப்பட்டது? என்பதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

1931ம் ஆண்டில் நடந்த விருதுநகர் மகாநாட்டிற்குப் பிறகு, 2, 3, மாதம் கழித்து, நவம்பர் துவக்கத்தில் பெரியாரவர்கள் மேனாட்டுச் [ரஷியா] சுற்றுப்பிரயாணஞ் செய்து விட்டு 1932ம் ஆண்டின் கடைசியில் இந்தியா திரும்பி வந்து; 1933, ஜனவரியில் சுயமரியாதை இயக்கத்தொண்டர்கள் (Workers) கூட்டம் ஒன்றை, சென்னைத் தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூட்டிச் சில திட்டங்கள் வகுத்து, அதற்கு "ஈரோட்டு சமதர்மத் திட்டம்" என்பதாகப் பெயர் கொடுத்து, அவற்றை வெளியாக்கியதோடு, அவற்றையே "சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய வேலைத் திட்டம்" என்பதாகக் கொண்டு, தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம், பிரச்சாரம் செய்து வந்த திட்டங்களில், இந்த ஜமீன் ஒழிப்புத் திட்டம் என்பதும் ஒரு முக்கியமான திட்டமாகும்.

அப்போதைய முக்கிய வேலை, வேலைத் திட்டங்கள் என்பதில், இந்த ஜமீன் ஒழிப்புத் திட்டம் மாத்திரம் அல்லாமல், லேவாதேவிக்காரர்கள் ஒழிப்புத் திட்டம் என்பதாக ஒன்றும், மிராசுதாரர்கள் ஒழிப்புத் திட்டம் என்பதாக மற்றொன்றும், கடவுள்கள் சுரண்டல் ஒழிப்புத் திட்டம் என்பதாக பிறிதொன்றுமாகச் சில திட்டங்களை முன்வைத்து, வேலை செய்து வந்ததல்லாமல், இவைகளுக்காக, இந்தப் பெயர்களாலேயே மகாநாடுகள் கூடப் பல இடங்களில் ஏற்பாடு செய்து, பல தீர்மானங்களும் செய்து வைப்பட்டிருப்பதானது, இன்றைப் பொதுவுடைமை வீரர்கள் என்று கூறிக் கொண்டு, சுய விளம்பரத் தொண்டாற்றிவரும் பல தோழர்களுக்கும் தெரியும்.

அக்காலப் பிரச்சாரச் சுற்றுப் பிரயாணத்தின் போதுதான், இன்றைய ஜோஷிப் பார்ப்பனரின் பொதுவுடமைக்கு முக்கியப் பிரச்சாரகராக விளம்பரப்படுத்தப்பட்டு வரும் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றவராவார். சுயமரியாதைப் பிரச்சாரக்காலத்தில், தோழர் ஜீவானந்தம் அவர்கள், ஒரு கிராமத்தில், குழந்தைகளுக்கான சாளைப் பள்ளிக்கூடத்தில், மற்றொரு தோழருடன் பள்ளிக்கூட வாத்தியாராய் இருந்து, "கதர்ப் பிரச்சாரம்" "காந்திப் பிரச்சாரம்" ஆகியவற்றைச்செய்து கொண்டு இருந்தவர். பிறகு சில கூட்டங்களில் நமது பொதுவுடமைச் சொற்பொழிவுகளைக் கேட்டு மனம் திரும்பி, சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து, பொதுவுடமைக்கு A. B. C. ஆன பார்ப்பனரல்லாதார் சமுதாயப் பிறவி இழிவு நீங்கவும், பார்ப்பனர் பிறவி உயர்வுச் சுரண்டல் நீங்கவும் நாம் செய்து வந்த பிரச்சாரத்தில் கலந்து பின் சுயமரியாதை இயக்கம் நேரடியாய்ப் பொதுவுடைமைப் பிரச்சாரமே செய்வதை முக்கியமாய்க் கொண்டு செய்த பொழுதும், இவர் பொதுவுடைமைக்காரராக பிரச்சாரம் செய்து வந்தவர்.

அந்தக் காலத்தில் தான், "ஜமீன்தார் அல்லாதவர் மகாநாடு" என்று, சேலம் ஜில்லா ராசிபுரத்தில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அதில் ஜமீன்தாரர்களுக்கு பிரதிபலன் (காம்பன் சேஷன்) இல்லாமல் ஜமீன்களைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். (பறிமுதல் செய்ய வேண்டும்) என்ற தீர்மானம் செய்யப்பட்டதாகும். அதற்குப்பிறகு அதே காலத்தில் தான், வாணியம்பாடியில், "லேவாதேவிக்காரர் அல்லாதார் மகாநாடு" என்பதாகக் கூட்டி, தனிப்பட்ட நபர்கள் லேவாதேவி செய்யக்கூடாதென்றும், கொடுக்கப்பட்டிருக்கும் கடன்களைக் கூடச் செல்லுபடியற்றதாக ஆக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டனவாகும். மற்றும் அதே சமயங்களில்தான் "மிராசுதாரர்கள் அல்லாதார் மகாநாடும்" அதுபற்றிய தீர்மானங்களும் செய்யப்பட்டனவாகும். ஒரு

* * *

## உறுப்பினர் சேர்க்கவும்

★

ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் இந்த ஆண்டுக்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையை உடனே துவக்கி பெருவாரியாக புது அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டுமென்றும் பழைய அங்கத்தினர்களிடமும் இவ்வாண்டு சந்தாத் தொகையை வசூலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகம் வேண்டுவோர், "விடுதலை" நிலையத்திற்கு எழுதவும்.

ஈ. வெ. ராமசாமி.

* * *

மனிதனுக்கு எந்தக்காரணம் கொண்டும், இத்தனை ஏக்கராவுக்குமேல் சொந்தமாகப் பூமி (விளைநிலம்) இருக்கக்கூடாது என்பதும், அதுவும் உழுகின்றவனுக்குத்தான் சொந்தமாக இருக்கவேண்டுமே ஒழிய உழுகாதவனுக்குச் சொந்தமாக இருக்கக்கூடாதென்பதும், அத்தீர்மானங்களாகும். மற்றும் இந்தப்படி நேரே உழுகின்ற குடியானவனுக்கு, வரி இருக்கக்கூடாதென்றும், உழுகாத குடியானவன்—மிராசுதாரர் இருக்க வேண்டி வந்தால் அவர்களிடம் அதிகமான வரிவாங்கிச் சரிக்கட்டும்படி செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டனவாகும்.

இவைகள்யாவும் தீர்மானங்களாகச் செய்யப்பட்டுப் பிரச்சாரம் சரிவரச் செய்யப்பட்டு, மக்களுக்குள் இது சரி, இது அவசியம், என்று படும்படியாகச் செய்யப்பட்ட பிறகே, கடவுள்கள் சொத்திலும் கடவுள்கள் தன்மையிலும் கூடப் பிரவேசித்து, சென்னையில் "நாஸ்திகர் மாநாடு" (பகுத்தறிவு மகாநாடு) என்னும் பெயரால், பெரியதொரு மகாநாட்டிற்கு ஏற்பாடுசெய்து, கடவுள்கள் சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் மடாதிபதிகள் தன்மைகளைக் கண்டித்து, மடாதிபதிகள் சொத்துக்களையும், பறிமுதல் செய்யவேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்து, இவைகளைப்பற்றிய பிரச்சாரங்களும் தொடர்ந்து 10, 15 ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த உண்மைகளை 1928ம் ஆண்டு முதல் நம் குடி அரசுப் பத்திரிகையில் காணலாம். செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் மகாநாட்டுச் சொற்பொழிவுகள் தீர்மானங்கள் ஆகியவற்றிலும் ஒரு அளவு காணலாம். இதன் பலனாகவே 'குடி அரசு" சர்க்காரால் உயர்ந்த தொகை ஜாமீன் கேட்கப்பட்டு, அதன் பத்திராதிபர்கள் என்கின்ற முறையில், தோழர்களான ஈ. வெ. கிருஷ்ணசாமி, எஸ். ஆர். கண்ணம்மாள், ஈ. வெ, ராமசாமி, பண்டித முத்துசாமிப் பிள்ளை முதலியவர்கள், —ஏன். தோழர் ஜீவானந்தமும் கூடச் சிறைவாசம் செய்யவும், "குடி அரசு" மறைந்து "புரட்சி" என்னும் பேரால் வெளிவரவும், பிறகு அதுவும் ஜாமீன் கேட்கப்பட்டு மறைந்து, "பகுத்தறிவு" என்னும் பேரால் வெளிவரவும், பிறகு அதுவும் மறைந்து பழையபடி "குடி அரசு" என்னும் பெயரால் வெளிவரவும், இவற்றின் தலையங்கங்களையும் முக்கிய கட்டுரைகளையும் தொகுத்து அச்சிட்ட "குடி அரசுக் கலம்பகம்" என்னும் புத்தகமும் மற்றும் பல புத்தகங்களும் பறிமுதல் செய்யப்படவுமான பல தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியதாயிற்று. இந்தச் சமயத்தில்தான் என்று சொல்லலாம். தோழர் ஜீவானந்தம் அவர்கள், நமது சுயமரியாதை இயக்கச் சார்பில், நமது சுயமரியாதை இயக்க அன்பர் தோழர் பார்த்தசாரதி அவர்களால், நமது வேண்டுகோள்மீது துவக்கப்பட்டு அவர் சொந்தப் பொறுப்பில் நடத்திவரப்பட்ட "சமதர்மம்" என்கின்ற பத்திரிகைக் காரியாலயத்தில் ஒரு ஆசிரியராயிருக்க நேர்ந்ததாகும். அந்தப் பத்திரிகையும் நம்மியக்கப் பிரச்சாரமே செய்து வந்ததால், அதுவும், நம் பத்திரிகை போலவே சர்க்காரின் அடக்குமுறைக்கு ஆளாகி மறைய வேண்டியதாகிவிட்டதுடன், இதனாலேயே அக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஜமீன்தார்களும், மதவாதிகளும், கடவுள் கொள்ளைக்காரர்களும, நம்மை அரசாங்கத்தின் பேரால் தொல்லைப்படுத்தினர்.

இப்படியாக, ஜமீன், இனாம், மட ஒழிப்பு என்பவை, இந்நாட்டு அரசியல் சரித்திரத்தில் கலந்து, சுயமரியாதை இயக்கத்தாராலேயே துவக்கப்பட்டு, நல்ல பிரச்சாரமும்செய்து, மக்கள் உள்ளத்தில் நல்லபடியாகப் பதியப்பட்டச் செய்ததாக இடம்பெற்றது என்பதையும், இன்று இவைகளுக்கு பார்ப்பனர்களைத் தவிர, வேறு யாருடைய எதிர்ப்புமில்லாமல், இந்த ஒழிப்புகள், உற்சாகத்தோடு மகிழ்ச்சிகரமாய்ப் பொதுமக்களால் வரவேற்கப்படுகின்றன என்பதும், எவரும் மறுக்கமுடியாததாகும்.

மற்றும் ஜஸ்டிஸ் கட்சியானது, ஆட்சியில் இருந்த காலத்தில், அது நமது தூண்டுதலின் பேரிலும் இனாம்களை ஒழிக்க முயற்சித்தபோது, இந்தப் பார்ப்பனர்கள்தான், அவர்களை பெரு துவுடமைச் சட்டம் செய்கிறார்கள் என்று வைது, பாமரமக்களுக்கு அவர்கள்மீது வெறுப்பை யுண்டாக்கக் காங்கரசின் பேரால் விஷமப் பிரச்சாரம் செய்துவந்தார்கள் என்பதும் மறுக்கமுடியாததாகும்.

"குடி அரசு"

★

22-11-47 முதல் 16-பக்கங்கள்:
விலை 2-அணா: வருட சந்தா ரூ. 7—0—0.

பெரியார் அவர்களால்
நடிப்புக்கு ஏற்ற முறையில் அமைக்கப்பட்ட,
"உண்மை இராமாயணம்"
வால்மீகியால் எழுதப்பட்டபடி உண்மைத்தன்மை விளங்க
தொடர்ந்து வெளிவரும்.

மற்றும், கைவல்யம், சித்திரபுத்திரன், ஈட்டி, ஊர் சுற்றி, பொதுக்கி, தெள்ளுமணி ஆகியவர்களின் கட்டுரைகளும், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, சினிமா, நாடக விமர்சனப் பகுதி, சிறு கதைப் பகுதி ஆகியவைகளுடனும் நல்ல முறையில் வெளிவரும்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

அதாவது அப்போது அவர்களால் செய்யப்பட்ட, சட்டம் கூட, செய்தும் சரியான பயன் அளிக்காமல், போய்விட்டது என்றாலும், இப்படிச் சட்டம் செய்த சர்க்காருக்கு, ஜமீன்தார் ஒருவர் தலைவராக இருந்த காரணத்தாலும், அப்போது ஜமீன்தாரர்களில் பெரும்பாலோர் ஜஸ்டிஸ்கட்சியை ஆதரித்து வந்ததாலும், பார்ப்பனர்களுக்கு ஜமீன்தாரர்கள்மீது ஆத்திரமும், பழிவாங்கவேண்டிய அவசியமும், மனதில் வளர்ந்துகொண்டே வரவேண்டியதுமாகிவிட்டது. இதுமாத்திரமா?

“ஆந்திர எதிர்ப்பு” கிளர்ச்சியின் போது, அக்கிளர்ச்சிக்கு ஜமீன்தாரர்கள் உதவி செய்கிறார்கள் என்று, இராஜகோபாலாச்சாரி சர்க்கார் தவறாகக் கருதிக் கொண்டு, அதாவது அந்தக்கிளர்ச்சிக்கு ஜஸ்டிஸ் கட்சி ஆதரவாக இருக்கிறது என்று கருதிக் கொண்டு, ஜமீன்தாரர்களுக்கு ஒரு மிரட்டுதல் அறிக்கை விட்டார் ஆச்சாரியார். அதன் கருத்து என்னவென்றால், ஜமீன்தாரர்கள் வளப்பம் [செல்வம்] இராஜதிருப் பொதுஜன சர்க்கார் எதிர்ப்புக்குப் பயன்படுவது தவறு என்பதாகும். அதே சமயத்தில், ஆந்திர நாட்டு அரசியல் தகராறு காரணமாக சீனியர் மந்திரி கோமுர் பிரகாசம் அவர்கள், ஜமீன்தாரர்களை மிரட்டவும், தங்கள் காரியத்திற்குச் செல்வம் பறிக்கவும், ஜமீன் ஒழிப்பு என்று ஒரு மிரட்டுதல் மசோதா கொண்டுவர அதிகாரம் பெற்று, திட்டம் ஏற்பாடு செய்தார்.

இவையாவும் பார்ப்பனர் செய்யும்படி ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், ஜமீன்தாரர்கள் யாவரும், அநேகமாய்ப் பார்ப்பனரல்லாதார்கள். (திராவிடர்கள்) “இன்றைய ஜமீன்தாரர்களுக்கும், பிராமண விசுவாசமோ, கடவுள் பக்தியோ, மோட்ச நம்பிக்கையோ, சாஸ்திர நம்பிக்கையோ எதுவும் இல்லை. பணம் செலவழிந்தாலும், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பெரியவர்களுக்கு உதவித் துறையில், சுகாதாரத் துறையில், தொழில் துறையில், உடமையிற் துறையில், பயன்படும் தர்மமாக ஆகி விட்டதே தவிர, பார்ப்பனருக்கே பயன்படும்படியான ஆத்மார்த்த துறைக்குச் செலவழிப்பதில்லையே. ஆகையால் இனி ஜமீன்கள், ஜமீன்தாரர்கள், அதாவது பார்ப்பனரல்லாதார்கள், (திராவிடர்கள்) செல்வவான்களாய் இருப்பது, பார்ப்பனருக்குக் கேடு” என்பதைக் கண்டு, இக்காரியத்தில் (ஜமீன் ஒழிப்பில்) பார்ப்பனர் ஈடுபடவேண்டியதாகி விட்டது.

இந்த நிலை ஏற்பட்டதாலேயே, இதற்குப் பொது மக்கள் எதிர்ப்பு இருக்காது என்று கருதியதாலேயே பார்ப்பனர், அதாவது இன்றைய ஆரிய சர்க்கார், இக்காரியத்தில் தீவிரமாய் இறங்கிப் பழி வாங்கவேண்டி வந்தது. ஆனால் ஜமீன்தாரர்கள் மீது பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட பொறாமை போலவே, சதுரேறக் குறைய அதற்கு மேலாகவே, திராவிடர்களுக்கு ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) மீதும் வெறுப்பு, பொறாமை இருப்பதால் பார்ப்பன ஜமீன்தாரர்கள் என்று கருதும்படியான இனாம்தாரர்களைப் பற்றிப் பொது மக்கள் நினைக்க, ஜமீன்தாரர்கள் முறை ஒழியவேண்டியதுதான் ஆனால் “அவர்களை (பார்ப்பனர்களை) மாத்திரம் ஏன் விட்டு வைக்க வேண்டும்” என்ற உணர்ச்சி பலமாக ஏற்பட்டதாலும், தங்களுக்குள்ளாகவும் ஆரியர்—திராவிடர் உணர்ச்சி இருப்பதாலும், “அரச மரத்தைப் பிடித்த பேய், பிள்ளையாரையும் பிடித்தது” என்பது போல், பார்ப்பனரல்லாத செல்வவான்களான, ஜமீன்தாரர்களைப் பிடித்த “சனி பகவான்” இப்போது பார்ப்பனர்களான இனாம்தாரர்களையும் பிடித்து விட்டது. இந்த நவக்கிரக தோஷத்திற்கு டெல்லிக்குப் போக நேர்ந்தாலும், நவக்கிரகம், அடியோடு தோஷத்தை நிவர்த்திக்காமல், சில உபசாந்தி மார்க்கம் சொல்லிவிட்டது. அதாவது சனீஸ்வர பகவானுக்கு, ஒரு மண்டலம் இருந்து நெய் (பணம்) விளக்கு வைக்கும்படி சொல்லி விட்டது.

இதுதான் ஜமீன் இனாம் ஒழிப்புகளின் உள் இரகசியம். ஆனால் இந்த ஒழிப்புக்கு, அதனால், ஒடுங்குகின்றவர்களுக்கும் ஜமீன்களுக்கும், இனாம்களுக்கும், பிரதிபலன் தொகை (காம்பன்சேஷன் பணம்) கொடுப்பது என்பது, இந்த ஒழிப்பின் கருத்தையே, தத்துவத்தையே, பயனையே மாற்றிவிடுகிறது. அதாவது பயன் இல்லாமல் செய்து விடுகிறது உண்மையில், இந்த ஒழிப்புகள், இருவகை ஜமீன்தாரர்களுக்கும் இலாபமே ஒழிய, நன்மையே ஒழிய நட்டமோ தீமையோ கிடையாது; சிறிதும் கிடையாது என்று கூறுவோம்.

எப்படி எனில், இந்தக் காலத்தில் ஜமீன்தாரனுக்கோ, பார்ப்பன இனாம்தாரனுக்கோ, ஏதாவது மரியாதை இருக்கிறதா? இனிமேல் வரும் சுயமரியாதை ராஜ்ஜியத்தில் அதுவும், எத்தனை சாஸ்திரிகள், எத்தனை பண்டிதர்கள், எத்தனை தான் பித்தலாட்டப் பிரச்சாரஞ் செய்தாலும், ஜமீன்தாரர்களுக்கும் இனாம்தாரர்களுக்கும், கவலையற்ற வாழ்வோ, ஓய்வோ, பெருமையோ, மதிப்போ, இருக்க முடியாது. ஜமீன்களுக்கு இனிமேல், குடிகளிடமிருந்து கிஸ்தி சரியாக வசூலாகாது; இனாம்களுக்குக் குடிகள், சரியானபடி பயிர் செய்து, பலன் கொடுக்கமாட்டார்கள். இப்படி கஷ்ட நிலைக்கு வந்துவிட்ட, இந்தக் கூட்டங்களுக்கு, இந்தத் தொல்லைகள் இல்லாதபடி, நல்ல அளவுக்கு, அதாவது தகுதிக்குமேலாகத், தாராளமாகப் பிரதிப்பலன் தொகை கொடுப்பது என்று ஏற்பட்டுவிட்டால், இது அவர்களுக்கு இலாபமும், சவுகரியமும், நல்லகாலமுமே ஆகும். இதுவரை ஜமீன்தாரனாக இருந்தவன், இனி, சீமானாக, பிரபுவாக, ஆகிவிடுகிறானே தவிர, அவனுக்கு நஷ்டமென்ன? பொது மக்களுக்கு இதனால் லாபமென்ன? சென்னை சர்க்கார், எப்படி ஒரு ‘எலக்டிரிக் கம்பெனி’ ‘ட்ராம் கம்பெனி’ ‘பஸ் கம்பெனி’ ஆகியவற்றிற்குப் பணம் கொடுத்து சர்வீஸ் நடத்துகிறதோ அது போல், பணம் கொடுத்து ஜமீன்களை வாங்கி, அந்தப்பணத்திற்கு வட்டி கட்டும்படி “வரி வசூல் சர்வீஸ்” செய்கிறது என்பதாகத் தான் ஆகுமே ஒழிய, குடிகளுக்கு—உழவர்களுக்கு லாபம் என்ன? சர்க்காருக்கு லாபம் என்ன? என்று கேட்கின்றோம், பொதுமக்களுக்குத்தான், இதனால் லாபம் என்ன என்று கேட்

கின்றோம்.

"ஜமீன்தாரன் எதற்கு? இவர்கள் இனி வேண்டாம்" என்பதற்குக் காரணம் என்னவென்றல், பயனற்ற ஒரு மனிதனுக்கு, பொதுப் பயன் எதுவும் அற்ற தன்மையில், இவ்வளவு பணம், இவ்வளவு வரும்படி, இவ்வளவு பெருமை, ஏன்? என்பதல்லாமல் வேறு காரணம்—கருத்து என்ன? ஜமீன் ஒழிப்புக்குக் காரணம் இது தான் என்றால் மாதம் 40 ஆயிரம் 50 ஆயிரம் ரூபாய் வரும்படி வரும் சர் அல்லாடிகளும், சர் சண்முகங்களும், சர் அண்ணாமலைகளும், வடபாதிமங்கலங்களும், பழயகோட்டைகளும், நாடிமுத்துக்களும் போன்றவர்கள் ஏன், அந்தப்படி ஜமீன்தாரர்கள்போல் அனுபவிக்க விட்டிருக்கவேண்டும்? மற்றும் ஒருவனுக்கு 100 வீடு 200 வீடு 500 வீடு ஏன் இருக்க வேண்டும்? ஒருவனுக்கு 10 மில் 20 மில் ஏன் இருக்கவேண்டும்? ஒவ்வொருவருக்கு 5000, 10000 என்று ஏன் சம்பளமிருக்கவேண்டும்? இவர்களைவிட ஜமீன்தாரர்கள் அதிக வரும்படிக்காரர்களா? அதிக சுகவாசிகளா? அதிகப் பிரபுக்களா? அதிகமாக மக்களைச் சுரண்டுபவர்களா? என்பதைப் பகுத்தறிவோடு யோசித்துப்பார்த்தால், இந்த ஒழிப்பு மாத்திரம் செய்வது ஓரவஞ்சனை அல்லது பைத்தியக்காரத் தன்மை அல்லது பழிவாங்கும் கீழ்த்தன்மை கொண்டதாக ஆகும் என்பதே நமது கருத்து.

சென்னைமாகாணத்திலுள்ள மொத்த ஜமீன்தாரர்களின் வரும்படி, மொத்தம் 2½ கோடி என்றால், பிர்லா ஒருவருடைய வரும்படி வருஷம் 2¾ கோடி 3 கோடி ஆகும். அவர் இன்கம்டாக்ஸில் ஏமாற்றுவது மாத்திரம் ஒருகோடி ரூபாய்க்கு மேற்பட்டதாகும் என்று டெல்லியிலுள்ள பெரிய அதிகாரிகளே சொல்லுகிறார்கள். ஒரு நாட்டின் வளப்பத்தை இப்படித் தனிப்பட்டவர்களைக் கொள்ளையடித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டு, பொதுமக்கள் பணத்தைப் — பொதுமக்கள் பேரால் கடன் வாங்கி பணத்தை—ஜமீன்தாரர்களுக்கு [illegible] பணஇலாப்தாரர்களுக்கு கொடு

# ராமராஜ்யம்

"சாம்பிள்"தே (?)

காங்கராசார் கூறிவந்த ராமராஜ்ஜியம், இப்பொழுது நடைபெற்று வருகின்றது. எவ்வகைக்கு ராமராஜ்ஜியம் என்று காங்கராசார் கூறினார்களோ, அன்றைக்கே, திராவிடர்கள் ராமராஜ்ஜியத்தை விரும்பமாட்டார்கள் என்றும், ராமராஜ்ஜியத்தை அழிப்பதே திராவிடனின் லட்சியம் என்றும் நாம் சொல்லி வந்திருக்கின்றோம்.

அக்கிரகாரக் குழந்தை 5வயதில் இறந்தது, சூத்திரன் ஒருவன் செய்த தவறே ஆகும் என்று, "துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனான இராமன்" தவஞ் செய்த சூத்திரனை, தலை வேறு உடல் வேறாகத் துண்டித்து நீதி வழங்கினான் என்பது வான்மீகர் கூறும் இராமராஜ்ஜியம். குற்றம் ஒன்றிருக்கே, குலவாரியாகத் தண்டனை வெவ்வேறு, என்பது இராமராஜ்ஜியத்திற்கு அடிப்படையான மனுதர்ம சாஸ்திரம் கூறும் நீதி. இராம ராஜ்ஜியத்தை—மனுதர்ம சாஸ்திரத்தை, மனித குலம் ஏற்காது.

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்

த்த, அவர்களிடமிருந்து நெல்லை மைய விலைக்கு வாங்குவதா என்று கேட்கின்றார்?

மற்றும், இந்த மாகாணத்திலுள்ள, கோவில்களுக்கு யாத்திரம் வருஷம் 2½ கோடி, 3 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது என்பது, கோவில்தான போர்டாரின் கணக்கு.

இந்தப் பணம், இவ்வளவையும் நிறுத்தவோ, படிப்பிற்கோ, சுகாதாரத்திற்கோ, தொழிற்சாலைக்கோ, பகுத்தறிவுக்கோ, அல்லது கலைகாட்சிக்கோ, செலவு செய்யவோ சர்க்காரிடம் என்ன திட்டமிருக்கின்றது? என்றால், இந்தச்சர்க்கார் பஜனையும் புராணக் காலட்சேபமும் தான் திட்டமாக இருக்கின்றன என்று கூறுவதைத் தவிர வேறு என்ன பதில் சொல்ல முடியும்?

மற்றவை அடுத்த வாரத்தில்.

## அறிவிப்பு

ஏஜண்டுகளும், சந்தாதாரர்களும் தாங்கள் அனுப்பும் தபால்களிலும், மணியார்டர் கூப்பன்களிலும் தயவு செய்து தங்கள் நெம்பரைக் குறிப்பிட்டு எழுதினால் தாமதமில்லாமல் கவனிக்க சௌகரியமாயிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். —மானேஜர்.

உள்ளுவரோ மனுநூதி ஒருகுலத்துக்கொரு நீதி"
என்று காலஞ்சென்ற சுந்தரனார், கவிதை மொழியிலே, திராவிடர்க்கு உணர்த்தி சென்றார். நாமும் இம்முறை—இந்நீதி இருத்தல் கூடாது என்று எல்லாவகையாலும் எத்தனையோ ஆண்டுகளாக, எழுதியும் பேசியும் நடித்தும், திராவிடர்க்கு உணர்த்தி வருகின்றோம். ஆனால் திராவிடர்கள் உணர்ந்து விழிப்படைந்தார்களா?

இதோ ஒரு சாட்சி. காங்கரஸ் ஆட்சி; மனுதரும ஆட்சியே என்று முழக்கமிடுகின்றது.

நாகப்பட்டினம், வழக்கு மன்றத்தில், காங்கரஸ் ஆட்சியில் நீதிதேவன் வழங்கிய நீதி என்று, தோழர் ஒருவர் நமக்கு எழுதியிருக்கின்றார்.

பாதையில் தவறாக நடந்த குற்றத்திற்குப் பலர் ஆளானார்கள். அவருள் ஆரியர் திராவிடர் என்ற இருதிறத்தாருமுண்டு. ஆனால் இக்குற்றத்திற்கு ஆளான ஆரியர்களாகிய,

சுப்பிரமணிய ஐயர்
நடேச ஐயர்
சூர்யமூர்த்தி ஐயர்
குருமூர்த்தி ஐயர்

ஆகியயோருக்கு அணா எட்டு வீதமும் மற்றையத் திராவிடர்களுக்கு ரூ. 1, 2 வீதமும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றது; என்பது கடிதத்தின் சாரம்.

திராவிடர்களே! இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த மனுதர்ம ஆட்சியை ஏற்றுக்கொள்ளப்போகின்றீர்கள்?

சமீபத்தில் இரயில்வேயின் கூறுகளால் ஏற்பட்ட சேதங்களில் இலங்கை [illegible] இலங்கையில் 15,000 பேர் வீட்டைத் துறந்தனர்.—இதுவரும் வரலாற்றும்.

[3ம் பக்கத்தொடர்ச்சி]

கொடுத்தே வாழவேண்டிய நிலையிலிருக்கும் நம் சர்க்கார், அதை நமக்குத் தெரிவிக்கிறது.

சென்னை மாகாணத்திற்கு நவம்பர் முதல் ஜனவரி வரையுள்ள காலத்திற்குக் கொடுக்கப்படும் கோட்டாவில் 2 லட்சம் காலன் பெட்ரோல் குறைக்கப்படும் என்று மத்திய சர்க்கார் அறிவிக்கிறது. கோட்டாவைக் குறைக்கக்கூடாது என்பதற்குப் பல காரணங்கள் காட்டி மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கப் போகிறது. மத்தியசர்க்கார் இணங்காவிட்டால், எல்லா மோட்டார்களுக்கும் கொடுக்கப்படும் பெட்ரோல் ரேஷன் பெருவாரியாகக் குறைக்கப்படும்.

இந்தமாதிரி எடுத்ததற்கெல்லாம் வடநாட்டை எதிர்பார்த்து, வாழ வேண்டுமென்பதுதானா? நம் தலைவிதி. மக்களுக்கு உயிர் வாழவும், மானத்தைக் காக்கவும், முக்கியமான பொருள்களாய் இருக்கும் உணவிலும் உடையிலும், மாகாண மக்களுக்கு நன்மையைத் தரும் வழியில் ஒரு சிறு மாற்றத்தைக்கூட இந்தச் சர்க்கார் செய்ய முடியாதென்றால்; இதற்குச் சர்க்கார் என்று பெயர் எதற்கு? சட்டசபைகளும் மந்திரி சபையும் எதற்கு? பிச்சைக்காரனுக்குக், 'கடைக்காரர் வெளியே போயிருக்கின்றார், வேறு கடைக்குப் போ' என்று கௌரவமாகப் பொய்யைக்கூறி, கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருக்கும் கடைக்காரர்களைக் காப்பியடிப்பதாக அர்த்தமா? மந்திரிகள் நினைப்பிலே மக்கள் என்றால் பிச்சைக்காரர்கள் என்று நினைப்பா?

இந்தமாதிரி ஒரு மந்திரிசபை இருந்து, கிட்டதட்ட மாதத்திற்கு அரை லட்ச ரூபாயை ஏப்பமிடுவதைக் காட்டிலும் ஒரே ஒரு ஏஜண்டை நியமித்துவிடலாமே? மத்திய சர்க்காரின் உத்தரவுகளை அவர் தெரிவித்துக்கொண்டிருக்க மாட்டாரா?

# குட்டிப் பதவிகள் கோவிந்தா!

## சென்னை சர்க்கார் முடிவு

சென்னை, அக். 28—

கிராம உணவு கமிட்டிகளை உடனே கலைத்துவிட வேண்டுமென்றும், அவைகளின் அலுவல்களை ரெவினியூ உத்தியோகஸ்தர்களும் சிவில் சப்ளை அதிகாரிகளும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. நகரங்களிலும் மேஜர் பஞ்சாயத்து பிரதேசங்களிலும் இருக்கும் ரேஷன் ஆலோசனைக் கமிட்டிகளின் அந்தஸ்திலும் அலுவல்களிலும் இவ்வருஷம் யாதொரு மாறுதலும் ஏற்படாது.

கிராம உணவு கமிட்டிகளை வைத்துக்கொள்வதா வேண்டாமா என்ற பிரச்னையைப்பற்றி சர்க்கார் தீவிரமாய் ஆலோசித்துவந்தது. ஏறக்குறைய எல்லா கலெக்டர்களும் கிராம கமிட்டிகள் சரிவர வேலை செய்யவில்லை என்று அபிப்பிராயப்பட்டனர். பெருவாரியான உத்தியோகஸ்தர் அல்லாதவர்களும் அதே அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர்.

தாலூகா, ஜில்லா உணவு கமிட்டிகளை கலைக்காமல் வைத்துக்கொள்வதைப்பற்றி சர்க்கார் ஆலோசித்து வருகிறது. அப்படி அவைகளை வைத்துக் கொள்வதாக தீர்மானிக்கப்பட்டால் அவைகள் ஆலோசனைக் கமிட்டிகளாக மாத்திரம் இருக்கும்.

(ஆங்காங்கு கிராமங்களிலுள்ள காங்கரஸ் வீரர்களுக்கும், குறிப்பாக ஆகஸ்ட் தியாகிகளுக்கும் வயிற்றுப்பிழைப்புக்கு நல்லதொரு மார்க்கமாக விளங்கியது இக்கமிட்டி. திடீரென்று அவர்கள் வாயில் மண் விழுந்தது. ஐயோ! பாவம்; அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபம். ஆ—ர்)

(2ம் பக்கத்தொடர்ச்சி)

ஆகவே தோழர்களே! நாங்கள் லெனினை இருக்கவேண்டும் என்று சொல்வதாகக்கூறப்படுவது சுயராஜ்யப் பித்தலாட்டத்தைப்போல், மற்றொரு பித்தலாட்டம் என்பதை உணர்ந்து, தங்கள் பகுத்தறிவுமூலம் ஆராய்ந்து, நேர்மையை உணர்ந்து, அந்த நேர்மை காட்டும் வழிப்படி, நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி முடித்தார்.

## ஈரோடு நகரசபை உபதலைவர் தேர்தல்

27-10-47 தேதி ஈரோடு நகரசபைத் தலைவர் தோழர் எஸ். கே. சென்னியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உபதலைவர் தேர்தலில் தோழர் கே. என். குப்புசாமி அவர்களும், தோழர் எ. முத்தையா அவர்களும் போட்டியிட்டனர். தோழர் கே. என். குப்புசாமி அவர்களுக்கு 14 ஓட்டுகளும், தோழர் எ. முத்தையா அவர்களுக்கு 8 ஓட்டுகளும் கிடைக்கப்பெற்று தோழர் கே. என். குப்புசாமி அவர்கள் வெற்றி பெற்றார்.

[தோழர் கே. என். குப்புசாமி அவர்கள் கவுன்சிலராகக்கூட வரக்கூடாதென தோழர் காமராஜர் முதல் டெபாஸிட் தொகையை இழந்த தோழர் ஈஸ்வரன் எம். எல். ஏ., உள்பட உள்ளூர் காங்கரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சித்தையன்வரை பாடுபட்டும் 'பாச்சா' பலிக்காமல் போனதோடு அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்ததுபோலிருக்கிறது வைஸ் சேர்மன் தேர்தல் முடிவு. ஆ-ர்]

## கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார்!

திருவண்ணாமலை நகரசபைத் தலைவர் தேர்தல் 11-10-47 தேதி நடைபெற்றது. திராவிடர் கழகத் தலைவர் தோழர் ப. உ. ஷண்முகம் அவர்களும், காங்கரஸ்கமிட்டித் தலைவர் வி.வி.எஸ். கதிர்வேல்பிள்ளை அவர்களும் போட்டியிட்டனர். இருவருக்கும் சமமான ஓட்டுக்கிடைத்தன. அதன்பேரில் திருவுளச் சீட்டுப் போட்டதில் "கடவுள்" நமது தோழர் ப. உ. ஷண்முகம் அவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டார்!

கரூர் நகரசபை உபதலைவர் தேர்தல் 14-10-47 தேதி நடைபெற்றது. திராவிடர் கழகப் பிரமுகர் தோழர் என். ரத்தினம் அவர்களும், காங்கரஸ் கமிட்டியாரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், பழனி சென்று ஆண்டவன் அருள் பெற்று வந்தவருமான தோழர் முத்துசாமிக் கவுண்டர் அவர்களும் போட்டியிட்டனர். இருவருக்கும் சமமான ஓட்டுக் கிடைத்தன. அதன்பேரில் திருவுளச்சீட்டுப் போட்டதில் "கடவுள்" நமது தோழர் என். ரத்தினம் அவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டார்!

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

# அசுரனின் அழிவு, யாருக்கு வெற்றி?